

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.1.2026) சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை துறைமுகத்தில் 6.1.2026 முதல் 9.1.2026 வரை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற இந்திய சர்வதேச இளையோர் பாய்மரப் படகு சாம்பியன்ஷிப் 2026 போட்டியில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு பதக்கம் அணிவித்து பாராட்டு தெரிவித்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இந்திய கடலோர காவல்படை டைரக்டர் ஜெனரல் பரமேஷ் சிவமணி, தமிழ்நாடு பாய்மர படகு சங்கத்தின் துணைத் தலைவர் அசோக் தாக்கர் உள்பட பாய்மரப் படகு வீரர், வீராங்கனைகள் உடனிருந்தனர்.

### நெடுஞ்சாலைத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும்

# கொளத்தூர் ஏரி பூங்கா சேவை - சாலைப் பணி - நடை மேம்பாலப் பணிகள் ஆய்வு!

## அமைச்சர்கள் எ.வ.வேலு – பி.கே.சேகர்பாபு நேரில் மேற்கொண்டு – பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினர்!

சென்னை, ஜன.11-

நெடுஞ்சாலைத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொளத்தூர் ஏரி பூங்கா சேவை சாலையின் பணிகளையும், கொளத்தூர், செந்தில் நகரில் கட்டப்பட்டு வரும் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடை மேம்பாலத்தின் பணிகளையும் மற்றும் ஜி.என்.டி சாலை, பாடி மேம்பாலம் அருகில் சாலை அகலப்படுத்துதல் ஆகிய பணிகளின் முன்னேற்றம் குறித்து அமைச்சர்கள் எ.வ.வேலு மற்றும் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேரில் ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஒப்பந்ததாரர் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (10.01.2026) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கேசேகர்பாபு ஆகியோர் கொளத்தூர்பெரம்பூர் பேப்பர் மில்ஸ் சாலையிலிருந்து வரும் வாகனங்கள் உள்வட்ட சாலையை அடைவதற்கும், கொளத்தூர் ஏரி பூங்கா செல்வதற்கும் 600 மீட்டர் நீளம் மற்றும் 7.50 மீட்டர் அகலம் கொண்ட சேவை சாலையின் இருபுறமும் 2.00 மீட்டர் அகலத்திற்கு நடைபாதையும், நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, சாலைப் பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஒப்பந்ததாரர் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினர்.

அதனைத் தொடர்ந்து நெடுஞ்சாலைத்துறை சார்பில், கொளத்தூர், செந்தில் நகரில் ரூ.15.42 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய நடை மேம்பாலம் மற்றும் ஜி.என்.டி சாலை, பாடி மேம்பாலம் அருகில் ரூ.155.35 கோடி மதிப்பீட்டில் சாலை மற்றும் மேம்பாலம் அகலப்படுத்துதல் முன்னேற்றப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஒப்பந்ததாரர் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினர்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட கொளத்தூர் பெரியார் நகர் முதல்வர் படைப்பகத்தையும் மற்றும் கொளத்தூர் ஜி.கே.எம். காலனியில் அமைந்துள்ள குளக்கரை பூங்காவையும் அமைச்சர்கள் எ.வ.வேலு மற்றும் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர். அதனைத் தொடர்ந்து, அமைச்சர் பெருமக்கள் சென்னை தீவுத்திடலில் அமைக்கப்பட்டு வரும் தற்காலிக பேருந்து நிலையத்தின் பணிகளை ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வுகளின்போது மேயர் திருமதி.ஆர்.பிரியா, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/ முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர்கள் (பெருநகரம்) ஜவகர் முத்துராஜ், (கட்டுமானம் & பராமரிப்பு) சத்தியபிரகாஷ், கண்காணிப்புப் பொறியாளர் சரவணசெல்வன், சிஎம்டிஏ கண்காணிப்புப் பொறியாளர் ராஜன் பாபு, எம்.டி.சி. இணை மேலாண் இயக்குநர் சுந்தரபாண்டியன், பொது மேலாளர் (இயக்கம்) நெடுஞ்செழியன், மண்டலக் குழுத் தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் நாகராஜன் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலை! ஆர்.கிருஷ்ணகுமார் ஏற்பாட்டில்

# சைதை மேற்கில் ‘கலைஞர் நூலகம்’ துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

## தமிழச்சி தங்கபாண்டியன், எம்.பி., துணை மேயர் மகேஷ்குமார் பங்கேற்பு!

சென்னை, ஜன.11-

அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார் ஏற்பாட்டில் சைதை மேற்கில் ‘கலைஞர் நூலகம்’ துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைக்கிறார், தமிழச்சி தங்கபாண்டியன், எம்.பி., துணை மேயர் மகேஷ்குமார், பகுதி செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, எம்.சி., இரா.துரைராஜ், எம்.சி. பங்கேற்கின்றனர்.

சென்னை தெற்கு மாவட்டம், சைதை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, சைதை மேற்கு பகுதியில், சென்னை தெற்கு மாவட்ட, இளைஞர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார் ஏற்பாட்டில், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில், சைதாப்பேட்டை, வி.எஸ். முதலித்தெருவில் கலைஞர் நூலகத்தை இன்று (11.1.2026, ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணியளவில் கழக மாநில இளைஞர் அணி செயலாளரும், மிழகத்தின் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று நூலகத்தை திறந்து வைக்கிறார்.

மேலும் இந்நிகழ்வில் சைதை மேற்கு பகுதி கழக செயலளாரும், 10வது மண்டல குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, சைதை பகுதி கழக செயலாளரும், 13வது மண்டல குழு தலைவருமான இரா.துரைராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், எம்.சி., களக்காடி எல்லப்பன், மின்னல் கந்தப்பன், கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணைச் செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பளர் கோட்டூர் எஸ்.பிரகாஷ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், காரப்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, பகுதி கழக நிர்வாகிகள் டி.என்.சிவமணி, த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதா கௌதமன், வி.பி.ஜானகிராமன், இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், ஆர்.அருணகிரி, மு.பாக்கியலட்சுமி, வட்ட கழக செயலாளர்கள், எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, சை.மு.சேகர், ந.தமிழரசு, அட்கோ கமலநாதன், த.மோகன்குமார், எம்.சி., ந.ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், கோட்டூர் க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேரு நகர் எஸ்.பாட்சா, வே.முருகன், ஆ.வரதன்,

அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் சைதை சாதிக், ந.மணிகண்டன், அஞ்சல் ராமன், கோ.பாஸ்கரன், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், ஆர்.ரவி, பால்கார் ரவி, பொன் ஜெய்சிங், ஜி.பாபு, த.மணி, ஆர்.எல்.காந்தன், டி.வி.நரசிம்மன், எஸ்.சேகர், என்.நந்தகோபால், எஸ்.ராதாகிருஷ்ணன், இரா.சுதாபிரியன், ந.பாபு, மு.மகேஷ், எஸ்.கணேசன், ஜி.செல்வராஜ், வே.ரமேஷ்குமார், ஏ.மஜித், எஸ்.ஜெ.சலாம், எஸ்.ரவி,

பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் ஜிம் க.பிரபு, கொடி.கே.பாலா, ம.சுகுமார், க.தீபன், இரா.சத்தியா, இரா.வெங்கடேசன், எஸ்.பரத்குமார், எம்.அருண், மே.குணா, ப. அருண்குமார், தி.கோகுலன், ப.பரத்குமார், கோ.ராஜன், ராஜா சம்பத், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்.எஸ்.மணி, ஏ.சந்தோஷ், டி.எஸ்.ரவிச்சந்திரன், என்.சம்மந்தம், ஆட்டோ தியாகு, கு.கார்த்திகேயன், மாவுமில் ஸ்ரீதர், கேபிள்காளி, தீ.ராஜ்குமார், திடீர்நகர் தாஸ், என்.தீனதயாளன், அ.தமிம் அன்சாரி, வெ.புருஷோத்தமன், ச.தினகர், ஆர்ட்ஸ் குமார், எம்.மாறன், கே.பிரபு, பிரஸ் கார்த்திக், வெ.கிஷோர்குமார், துரைராஜ், சிற்றரசு, பி.நரேஷ்குமார், ரவீந்திரகுமார், எம்.ஜி.மதிவாணன், மற்றும் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.



திருவள்ளூர் அடுத்த பாண்டூரில் உள்ள இந்திரா கல்வி குழுமம் சார்பில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இதில் இந்திரா கல்வி குழுமத்தின் நிறுவன தலைவரும், திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன்சமத்துவ பொங்கல் தொடங்கி வைத்தார். உடன் மேலாண்மை இயக்குனர் இந்திரா ராஜேந்திரன், கல்லூரி டீன், டைரக்டர், முதல்வர்கள், துணை முதல்வர்கள், இணை பேராசிரியர்கள், துணை பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்





